முருகப்பெருமான் துணை

**மகான் நாரதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.03.2024**, திங்கள்கிழமை

1. அறமாக வாழும் அரங்கா
அருளமுது தன்னை வழங்கி
வரமாக மக்களிடை தீட்சையை
வழங்கியும் காக்கும் தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சால்திங்கள்
ஆற்றல்பட எழுநான்கு திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 28ம் நாள், 11.03.2024, திங்கள்கிழமை)
3. வாரமதில் நாரதர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி மக்களை தேற்றி
செகமெங்கும் விழிப்புணர்வு காண
4. காணவே சன்மார்க்க சங்கமதை
கருணை கொண்டு படைத்து
ஞானம்தனை எளிய மக்களும்
நம்பகமுற அடைந்து தேற
5. தேறவே வழிகாட்டும் தேசிகனே
தெய்வநெறி மக்களும் அறிய
சரவணச் சுடரேற்றி வழிபாட்டை
சற்குருவாய் நடத்தும் அரங்கனே
6. அரங்கனே நீயே ஆறுமுகனென
அவதாரம் தனை மக்களறிய
வரங்கள்தனை முழுமதி தோறுமே
வல்லமைமிக்க ஞானிகள் பூசையாக
7. பூசையாகவே நடத்தி இனிதே
பூமியில் ஞானிகளே இறங்கி
நேசம்பட அனைத்து மக்களுக்கும்
நல்வரமாக வழங்கும் குருராஜனே

8. அரசனே உன் சேவைமெச்சி
ஆறுமுகனார் பிரணவக்குடிலை
தரணியில் ஏழாம்படைவீடாக
தன்அறுபடை வீட்டோடு இணைத்து
9. இணைத்து அனுகூலம் தந்திட
எந்த பேதமும் கருதாமல்
துணைவா என வேண்டி
தொடர்ந்து ஓங்கார குடில்நோக்கி
10. நோக்கியே உலகோர் வந்திட
நிலவுலகில் எல்லா பாதுகாப்பும்
ஆக்கமுடன் ஆறுமுகனே தந்து
அவரவர் வினைகள் போக்கி
11. போக்கியே அரங்கன் உருவாக்கும்
புண்ணிய பலமிக்க படைகளுள்
ஆக்கமுடன் தேர்வு கொண்டுமே
அகிலம்தனில் மாற்றம் புரிவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–